CC.NO.68/2017

**எதிரி ஆஜரில்லை. 317 குவிமுசவின் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.7, முத்துக்குமார், த/பெ. நாகசுந்தரம், எம்.பி.எண்.23/2025, தேதி 27.10.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

எந்த புகாரின் அடிப்படையில் நான் புலன் விசாரணை செய்தேன் என்றால் 02.04.2015ம் தேதி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் crl.o.p. No. (MD22105/2014) Dated 11.12.2014ல் கண்ட உத்தரவின்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.லட்சுமிபதி ராஜ் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். உயர் நீதிமன்ற மதுரை கிளையில் crl.o.p. No.(MD22105/2014) Dated 11.12.2014ல் கண்ட உத்தரவை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. அ.சா.1 ஐ விசாரணை செய்தபோது இதற்கு முன்னதாக ஒரு புகார் கொடுத்ததையோ, அதற்கு சிஎஸ்ஆர் எண் கொடுத்ததையோ குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சரியாக ஞாபகமில்லை. செம்பு, வெள்ளி, பித்தளை மற்றும் தங்க நாணயங்கள் என்று அ.சா.1 குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் புகார் மனுவிலும், விசாரணையிலும் சொல்லியுள்ளார்.

2. எவ்வளவு நாணங்கள் என்றும், என்ன உருவம் பதிக்கப்பட்ட நாணயங்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் குறிப்பிட்டு சொல்லியுள்ளார். பண்டைய கால அரசர்கள் ராஜராஜ சோழன் சங்க காலத்தில் உள்ள அரிதான நாணயங்கள் என்று கூறியுள்ளார். நாணயங்களின் மதிப்பு

மற்றும் எண்ணிக்கை பற்றி புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் புகாரில் கூறவில்லை, எனது விசாரணையில் சுமார் ரூ.3,00,000/- என்று கூறியுள்ளார். அ.சா.1 நாணய சேகரிப்பாளர் என்பதற்கு அடையாள அட்டை ஏதேனும் கொடுத்தாரா அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் அடையாள அட்டை என்னிடம் காண்பித்தார். ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்று ஞாபகமில்லை. அ.சா.1ன் போன் விவரங்களை சிடிஆர் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சிடிஆர் மூலம் இந்த குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதற்கானதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சூட்கேஸ் என்ன நிறம் என்று அ.சா.1 சொன்னாரா என்றால் இல்லை.

3. கைரேகை நிபுனர் மூலம் விசாரணை செய்தேனா என்றால் கைரேகை தடயம் சேகரிப்பதற்கான உள்ள தடயத்தை எதிரி எடுத்து சென்றுவிட்டதால் அதனை செய்ய வாய்ப்பில்லாமல் போய்விட்டது. நான் பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை. அ.சா.2 எனது விசாரணையில் நாணங்கள் மட்டும்தான் எதிரி எடுத்து சென்றதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் நாணயங்கள், பிரிட்டிஷ் நாணயங்கள், பணத்தாள்கள், இந்திய ரூபாய் நோட்டுகள், செம்பு, வெள்ளி, பித்தளை நாணய்ங்கள், பவுச்கள் மற்றும் பிளாஸ்டிக் டப்பாக்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றதாக கூறினார். குழந்தை சாட்சியான அ.சா.2 நேரடியாக எதிரி ஏமாற்றி எடுத்துச் சென்ற விஷயத்தை சரியாக என்னிடம் விசாரணையில் கூறினார். அ.சா.2 எனது விசாரணையில் எவ்வளவு பணத்தாள்கள் எடுத்து சென்றதாக கூறியுள்ளாரா என்றால் இல்லை.

4. அ.சா.3 எனது விசாரணையில் சம்பவம் நடந்ததை பற்றி எனது தந்தையிடம் சொன்னேன் என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. எனது விசாரணையில் அ.சா.1,2,3 ஆகியோர்கள் எந்தெந்த

கண்காட்சிகளுக்கு சென்று நாணயங்களை சேமித்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக இதற்கு முன்னதாக கொடுத்த புகார் பற்றி எனக்கு தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சரியாக புலன் விசாரணை செய்யாமல் மேற்படி எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./−எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**